# நல்லுறவை வலுப்படுத்த இந்தியா-எகிப்து உறுதி

## 4 ஒப்பந்தங்கள் கையொப்பம்

கெய்ரோ, ஜூன் 25: எகிப்தில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்ட பிரதமர் நரேந்திர மோடி, அந்த நாட்டு அதிபர் அப்தெல் ஃபட்டா எல்-சிசியை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கு இடையே காணப்படும் நல்லுறவை மேலும் வலுப்படுத்த இருவரும் உறுதியேற்றதோடு, 4 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையொப்பமாகின.

அமெரிக்க அரசுமுறைப் பயணத்தை முடித்துக் கொண்ட பிரதமர் மோடி, முதல் முறையாக எகிப்தில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டார்.

எகிப்துக்கு சனிக்கிழமை பிற்பகல் சென்றடைந்த பிரதமர் மோடி, அந்த நாட்டு அதிபர் எல்-சிசியை ஞாயிற்றுக்கிழமை சந்தித்துப் பேசினார்.

இருவரும் தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். அப்போது, இருதரப்பு நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாகத் தலைவர்கள் விவாதித்தனர். பிராந்திய, சர்வதேச விவகாரங்கள் குறித்து இருவரும் விவாதித்ததாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தில்லியில் நடைபெறவுள்ள ஜி20 மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு அதிபர் எல்-சிசிக்குப் பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார்.

இந்தச் சந்திப்பு குறித்து வெளியுறவுச் செயலர் வினய் குவாத்ரா செய்தியாளர்களிடம் கூறுகையில், 'இருதரப்புக்கும் இடையே 4 ஒப்பந்தங்கள் கையொப்பமாகின. இருதரப்பு நல்லுறவை வலுப்படுத்துவது தொடர்பான முக்கியமான ஒப்பந்தமும் அவற்றில் அடங்கும்.

வேளாண்மை, தொல்லியல் நினைவுச் சின்னங்கள் பாதுகாப்பு, தொழில்போட்டி சட்டம் ஆகியவை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.

பல்வேறு துறைகளில் இந்தியாவுக்கும் எகிப்துக்கும் இடையே நிலவும் நல்லுறவு குறித்து தலைவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டனர். பாதுகாப்பு, வர்த்தகம், முதலீடு, தகவல்-தொழில்நுட்பம், கல்வி உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு நல்லுறவை மேலும் வலுப்படுத்துவதற்குப் பேச்சுவார்த்தையின்போது உறுதியேற்கப்பட்டது' என்றார்.

எகிப்து பிரதமர் முஸ்தபா மத்பூலி தலைமையிலான அமைச்சரவைக் குழுவுடனும் பிரதமர் மோடி பேச்சுவார்த்தை நடத்தினார். இருதரப்பு நல்லுறவை மேம்படுத்துவது தொடர்பாக அப்போது விவாதிக்கப்பட்டது.

**போர் நினைவிடத்தில் மரியாதை:** முதலாம் உலகப்போரின் போது எகிப்து மற்றும் பாலஸ்தீனப் பகுதிகளில் போரிட்டு உயிர்த் தியாகம் செய்த சுமார் 4,000 இந்திய வீரர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள ஹீலியோபோலிஸ் காமன்வெல்த் போர் நினைவிடத்துக்கு ஞாயிற்றுக்கிழமை சென்று பிரதமர் மோடி மரியாதை செலுத்தினார்.

உயிர்த் தியாகம் செய்த இந்திய வீரர்களின் பெயர்கள் நினைவிடத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. அங்கு மலர்களைத் தூவி பிரதமர் மோடி மரியாதை செலுத்தினார். அவர்களது வீரம் என்றும் நினைவில் நிற்கும் என ட்விட்டரில் பிரதமர் மோடி குறிப்பிட்டார்.

**வரலாற்றுச் சிறப்புமிக்கது:** பிரதமர் மோடி ட்விட்டரில் வெளியிட்ட பதிவில், 'எகிப்து பயணம் வரலாற்றுச் சிறப்புமிக்கதாக இருந்தது. இந்தப் பயணமானது, இந்தியாவுக்கும் எகிப்துக்கும் இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்தி, இரு நாட்டு மக்களுக்கும் பெரும் பலனளிக்கும்' எனக் குறிப்பிட்டுள்ளார்.



பிரதமர் நரேந்திர மோடிக்கு எகிப்தின் மிக உயரிய 'ஆர்டர் ஆஃப் தி நைல்' விருதை ஞாயிற்றுக்கிழமை வழங்கி கௌரவித்த அதிபர் எல்-சிசி.

## பிரதமர் மோடிக்கு எகிப்தின் உயரிய விருது

எகிப்தில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்ட பிரதமர் நரேந்திர மோடிக்கு அந்நாட்டின் மிக உயரிய 'ஆர்டர் ஆஃப் தி நைல்' விருது வழங்கப்பட்டுள்ளது.

அந்த விருதை பிரதமர் மோடிக்கு எகிப்து அதிபர் அப்தெல் ஃபட்டா எல்-சிசி ஞாயிற்றுக்கிழமை வழங்கி கௌரவித்தார்.

எகிப்து நாட்டுக்கும் மனிதகுலத்துக்கும் ஈடு இணையற்ற சேவைகளை வழங்கும் நாடுகளின் தலைவர்கள், அதிபர்கள், துணை அதிபர்கள் உள்ளிட்டோருக்கு 'ஆர்டர் ஆஃப் தி நைல்' விருதை எகிப்து வழங்கி வருகிறது. 1915-ஆம் ஆண்டுமுதல் அந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.

அந்த விருதானது தற்போது பிரதமர் மோடிக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

விருதை தாழ்மையுடன் ஏற்றுக் கொள்வதாக ட்விட்டரில் பதிவிட்ட பிரதமர் மோடி, இந்த விருதானது இந்தியா மீதும் இந்தியர்கள் மீதும் எகிப்து கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்துவதாகக் குறிப்பிட்டார்.

பல்வேறு நாடுகளின் உயரிய விருதுகளை ஏற்கெனவே பெற்றுள்ள பிரதமர் மோடிக்கு, இது 13-ஆவது விருதாகும். கடந்த 9 ஆண்டுகளில் பப்புவா நியூ கினியா, ஃபிஜி, பலாவு குடியரசு, பூடான், அமெரிக்கா, பஹ்ரைன், மாலத்தீவுகள், ரஷியா, ஐக்கிய அரபு அமீரகம், பாலஸ்தீனம், ஆப்கானிஸ்தான், சவூதி அரேபியா ஆகிய நாடுகளின் உயரிய விருதுகளை பிரதமர் மோடி பெற்றுள்ளார்.

## தாயகம் திரும்பினார் பிரதமர் மோடி

புது தில்லி, ஜூன் 25: அமெரிக்கா, எகிப்து அரசுமுறைப் பயணங்களை முடித்துக் கொண்டு பிரதமர் மோடி ஞாயிற்றுக்கிழமை இரவு தாயகம் திரும்பினார்.

அரசுமுறைப் பயணமாக அமெரிக்காவுக்கு கடந்த 20-ஆம் தேதி பிரதமர் மோடி புறப்பட்டுச் சென்றார். கடந்த 21 முதல் 24-ஆம் தேதி வரை அமெரிக்காவில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்ட அவர், பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். அந்நாட்டு அதிபர் ஜோ பைடனுடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்திய அவர், பல்வேறு முக்கிய ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டார்.

அமெரிக்க நாடாளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் சிறப்புமிக்க உரையாற்றிய பிரதமர் மோடிக்கு, அதிபர் பைடன், அவரின் மனைவி ஜில் பைடன் ஆகியோர் அரசுமுறை விருந்து வழங்கினர். துணை அதிபர் கமலா ஹாரிஸ் உள்ளிட்ட அதிகாரிகளையும் சந்தித்துப் பேசிய பிரதமர் மோடி, அங்குள்ள இந்திய சமூகத்தினர் மத்தியிலும் உரையாற்றினார்.

பின்னர், எகிப்துக்கு முதல் முறையாக அரசுமுறைப் பயணம் மேற்கொண்டு முக்கியப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார். அதை முடித்துக் கொண்டு ஞாயிற்றுக்கிழமை இரவு அவர் தாயகம் திரும்பினார்.

**அல்-ஹகீம் மசூதியில் பிரதமர் மோடி**
(செய்தி உள்ளே)

# போதைப் பொருள் ஒழிப்பு: காவல் துறை அதிகாரிகளுக்கு முதல்வர் பதக்கம்



சென்னை, ஜூன் 25: போதைப் பொருள் ஒழிப்பில் ஈடுபட்ட தென்மண்டல காவல் துறை தலைவர் அஸ்ரா கார்க் உள்ளிட்ட 6 காவல் துறை அதிகாரிகள், காவலர்களுக்கு முதல்வர் பதக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு சார்பில் ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

போதைப் பொருளை ஒழிப்பதற்காக உண்மையாக உழைக்கும் அதிகாரிகள், காவலர்களை ஊக்குவிப்பதற்காக முதல்வரின் பதக்கம் வழங்கப்படும் என பேரவையில் 9.5.2022-இல் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மானியக் கோரிக்கையின்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

அதன்படி, வெ.பத்ரிநாராயணன் (கோவை மாவட்ட ஊரக காவல் கண்காணிப்பாளர்), டோங்கரே பிரவீண் உமேஷ் (தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர்), மா.குணசேகரன் (சேலம் உட்கோட்ட இருப்புப் பாதை காவல் துணைக் கண்காணிப்பாளர்), க.முருகன் (நாமக்கல் மாவட்ட காவல் சார்பு ஆய்வாளர்), இரா.குமார் (நாமக்கல் முதல்நிலை காவலர்) ஆகியோருக்கு முதல்வர் பதக்கம் வழங்கப்படுகிறது.

அதேபோல, போதைப் பொருள் உற்பத்தி மற்றும் சட்டவிரோதக் கடத்தலை ஒழிப்பதில் மதுரை தென்மண்டல காவல் துறைத் தலைவர் அஸ்ரா கார்க்கின் சீரிய பணியை அங்கீகரித்து அவருக்கு ரொக்கப் பரிசு இல்லாமல், சிறப்புப் பதக்கம் தனி நேர்வாக வழங்கப்படுகிறது.

அஸ்ரா கார்க்கின் தனிப்பட்ட முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்பு மிகுந்த கண்காணிப்பின் மூலம் போதை மருந்துகள் மற்றும் மனநோய் பொருள்கள் சட்டத்தின் கீழ் குற்றங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளின் பல கோடி ரூபாய் மதிப்பு சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன. மூத்த அதிகாரிகளுக்கும் அவர் பயிற்சி அளித்துள்ளார்.

மேலும், 2022-2023-இல் 1,843 பேர் குற்ற நடவடிக்கைக்கு உள்ளாகியுள்ளனர். இது சமூகத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை உருவாக்கியது. வரும் ஆகஸ்ட் 15-ஆம் தேதி சுதந்திர தின விழாவில் இந்த விருதுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்குவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்க புதிய திட்டம்



**சென்னை, ஜூன் 25:** சென்னை மாநகராட்சி பகுதியில் குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்க புதிய திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும் என மேயர் ஆர்.பிரியா தெரிவித்தார்.

சென்னை மாநகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மையை மேம்படுத்தும் வகையில் திடக்கழிவு மேலாண்மை தொழில்நுட்பத்தை அறிந்து அதை செயல்படுத்துவதற்காக மேயர் பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், கூடுதல் ஆணையர் (சுகாதாரம்), சங்கர்லால் குமாவத், தலைமைப் பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) என்.மகேசன் உள்ளிட்டோர் ஸ்பெயின், இத்தாலி, பிரான்ஸ் ஆகிய ஐரோப்பிய நாடுகளுக்கு கடந்த ஜூன் 17-ஆம் தேதி சென்றனர்.

தொடர்ந்து 3 நாடுகளில் மேற்கொள்ளப்படும் திடக்கழிவு மேலாண்மை மற்றும் மறுசுழற்சி முறை குறித்து தெரிந்துகொண்டு ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சென்னை திரும்பினர்.

அப்போது, செய்தியாளர்களிடம் மேயர் பிரியா கூறியது:

சென்னை மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை மிகவும் சவாலாக உள்ளது. தமிழக முதல்வரின் கனவுத் திட்டமான 'சிங்கார சென்னை 2.0' உருவாக்குவதில் திடக்கழிவு மேலாண்மையின் பங்களிப்பு மிக அதிகமாக உள்ளது.

இந்த நிலையில் ஸ்பெயின், இத்தாலி, பிரான்ஸ் ஆகிய ஐரோப்பிய நாடுகளில் திடக்கழிவு மேலாண்மையை எவ்வாறு மேற்கொள்கிறார்கள் என்பது குறித்து ஆய்வு மேற்கொண்டோம்.

இத்தாலியில் நெகிழிகளை தனியாகப் பிரித்து சிறப்பான முறையில் கையாளுகின்றனர். பிரான்ஸில் திடக்கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கின்றனர்.

இந்த நாடுகளில் உள்ள தொழில்நுட்பத்தை சென்னை மாநகராட்சிக்கு ஏற்ற வகையில் செயல்படுத்துவது குறித்து ஆய்வு செய்யப்படும்.

கொடுங்கையூர் குப்பை கிடங்கில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் விரைவில் தொடங்கப்படவுள்ளது.

சென்னை மாநகராட்சி பகுதியில் ஏற்கெனவே உயிரி எரிவாயு முறை இரு இடங்களில் மேற்கொள்ளப்படுகிறது. கூடுதலாக சோழிங்கநல்லூர் மற்றும் கோயம்பேட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

இதன் மூலம் கூடுதலாக 400 டன் திடக்கழிவு மூலம் உயிரி எரிவாயு தயாரிக்கப்படும்.

மேலும், சென்னையில் குப்பையிலிருந்து மின்சாரம் பெறும் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும் என்றார் அவர்.

EVA STALIN IAS ACADEMY

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# சென்னை மாநிலக் கல்லூரியில் வி.பி.சிங் முழு உருவச் சிலை

## முதல்வர் அறிவிப்பு

**சென்னை, ஜூன் 25:** முன்னாள் பிரதமர் வி.பி.சிங்கின் முழு உருவச் சிலை, சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.



இது தொடர்பாக தமிழக அரசின் சார்பில் ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

முன்னாள் பிரதமர் வி.பி.சிங் பிற்படுத்தப்பட்ட மக்களின் கலங்கரைவிளக்கமாகத் திகழ்ந்தவர். அவரின் முழு உருவச் சிலை சென்னையில் அமைக்கப்படும் என்று சட்டப்பேரவையில் 110-ஆவது விதியின் கீழ் ஏப்.20-இல் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். அதன்படி சென்னை மாநிலக் கல்லூரி முன்னாள் மாணவர் பேரவை, பேராசிரியர்கள் ஆகியோரது வேண்டுகோளை ஏற்று, அந்தக் கல்லூரி வளாகத்தில் வி.பி.சிங்கின் முழு உருவச் சிலை அமைக்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**புகழாரம்:** வி.பி.சிங் பிறந்த நாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட வாழ்த்துச் செய்தி:

வி.பி.சிங் பிறந்த நாளில், பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை முன்னேற்றுவதில் உறுதியான அர்ப்பணிப்புடன் இருந்த அந்தப் புரட்சியாளருக்கு எனது புகழஞ்சலியைச் செலுத்துகிறேன். சமூக நீதிக்கான பணியை அச்சமின்றி முன்னெடுத்து, இடஒதுக்கீடு எங்கள் உரிமை என அனைவரையும் ஓங்கி முழங்கச் செய்தவர் அவர்.

வாய்ப்பு மறுக்கப்பட்டோருக்கு அதிகாரமளிக்கும் இலக்கில் வி.பி.சிங்கும், கருணாநிதியும் ஒன்றிணைந்து செயல்பட்டனர். அவரின் சிந்தனைகள் மேலும் ஒளிமயமான, சமத்துவமான எதிர்காலத்தை நோக்கி நம்மை தொடர்ந்து வழிநடத்தட்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# கேரளத்தில் அதிகரிக்கும் டெங்கு: தமிழகத்தில் கண்காணிப்பைத் தீவிரப்படுத்த உத்தரவு

**சென்னை, ஜூன் 25:** கேரளத்தில் டெங்கு பாதிப்பு அதிகரித்து வரும் நிலையில், அந்த மாநிலத்தையொட்டியுள்ள தமிழக எல்லைகளில் கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளதாக பொது சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, கோவை, தேனி, கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்டங்களில் காய்ச்சல் பாதிப்புகளைக் கண்காணித்து தகவல்களை அளிக்குமாறு அலுவலர்களை அறிவுறுத்தியுள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

கேரளத்தில் தென்மேற்கு பருவ மழை தொடங்கியுள்ள நிலையில், அங்கு கொசு உற்பத்தி அதிகரித்திருப்பதாகத் தெரிகிறது. இதன் காரணமாக அந்த மாநிலம் முழுவதும் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 25 பேர் டெங்கு காய்ச்சலுக்கு பலியானதாக செய்திகள் வெளியாகின.

தமிழகத்தில் அத்தகைய நிலை இல்லை என்றாலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக எல்லையோர மாவட்டங்களில் மருத்துவ முகாம்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் கொசு ஒழிப்பு மற்றும் டெங்கு தடுப்புப் பணிகளில் 18 ஆயிரம் ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இது குறித்து பொது சுகாதாரத் துறை கூடுதல் இயக்குநர் வடிவேலன் கூறியதாவது:

கடந்த சில வாரங்களாக கேரளத்தில் டெங்கு பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதையடுத்து தமிழகத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

அதன்படி, அண்டை மாநிலங்களின் டெங்கு பரவல் விவரங்களை மாவட்ட துணை சுகாதார இயக்குநருக்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

நோய்களைப் பரப்பும் கொசுக்கள் மற்றும் லார்வா உற்பத்தி குறித்து கண்காணிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. வீடுகள், பள்ளிகள், பூங்காக்கள், கல்லூரிகள், பொது இடங்கள் என அனைத்து இடங்களிலும் தனித்தனியே விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்கான பணிகளில் 18 ஆயிரம் பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதைத் தவிர, தேவையான இடங்களில் மருத்துவ முகாம்களை நடத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குடிநீரில் போதிய அளவு குளோரின் கலந்து விநியோகித்தல், உணவுப் பொருள்கள் தரத்துடன் இருப்பதை உறுதி செய்தல், தனி நபர் சுகாதாரம் உள்ளிட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றார் அவர்.

# 'தமிழகத்தில் போதைப் பொருள் புழக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது'

**நாகர்கோவில், ஜூன் 25:** தமிழகத்தில் காவல் துறையின் கடுமையான நடவடிக்கைகள் காரணமாக, போதைப் பொருள் புழக்கம் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று தமிழக காவல் துறை தலைமை இயக்குநர் செ.சைலேந்திரபாபு தெரிவித்தார்.

கன்னியாகுமரி மாவட்டத்துக்கு ஞாயிற்றுக்கிழமை வந்த அவர், குளச்சல் துணைக் காவல் கண்காணிப்பாளர் முகாம் அலுவலகம் மற்றும் புதிய குடியிருப்பு கட்டடம், கொற்றிக்கோடு காவல் நிலைய புதிய கட்டடம், தக்கலை மதுவிலக்குப் பிரிவு காவல் நிலையம், துணைக் காவல் கண்காணிப்பாளர் முகாம் அலுவலகம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

இதைத் தொடர்ந்து நாகர்கோவில் ஆயுதப்படை மைதானத்தில் நடைபெற்ற போதைப் பொருள் தடுப்பு குறித்த தோல் பாவைக் கூத்து, ஜிம்னாஸ்டிக் நிகழ்ச்சி, 1,500 மாணவர்கள் பங்கேற்ற போதைப் பொருள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் டிஜிபி பங்கேற்றார். மேலும், போதைக்கு எதிரான ஓவியக் கண்காட்சியையும் டிஜிபி பார்வையிட்டார்.

பின்னர், திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு குறித்த ஓவியம், பேச்சு உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு அவர் பரிசு வழங்கினார்.



போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுடன் டிஜிபி சைலேந்திரபாபு.

இதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் டிஜிபி கூறியதாவது:

தமிழகத்தில்போதைப்பொருள் கடத்த பயன்படுத்தப்பட்ட 2,762 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. மேலும் போதைப் பொருள் புகார்கள் குறித்து கடும் நடவடிக்கை மேற்கொண்டதால், மாநிலத்தில் 282 காவல் நிலைய எல்லையில் போதைப் பொருளே இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. தொடர் நடவடிக்கைகளின் மூலம் தமிழகத்தில் போதைப் பொருள் புழக்கம் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. போதைப் பொருள் கடத்தல், விற்பனைக்கு உதவியதாக 18 காவல் துறை அதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பிற மாநிலங்களிலிருந்து தமிழகத்துக்கு போதைப் பொருள் வருவது குறித்து பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்களிலும் சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

பெண்களுக்கு பாதுகாப்பு திட்டம்,இன்னும்சரியாகசென்று சேரவில்லை என்பதால் அதனை மேலும் பிரபலப்படுத்த காவல் துறை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.'காவல் ஆப்' என்ற இந்த கைப்பேசி செயலியை பெண்கள் தங்கள் கைப்பேசியில் பதிவிறக்கம் செய்து, ஆபத்து நேரத்தில் இந்தச் செயலியைத் தொட்டால் போதும், உடனே காவலர்கள் சம்பந்தப்பட்ட இடத்துக்கு சென்று பெண்களை பாதுகாப்பாக அழைத்துச் சென்று அவர்களது வீட்டில் விடுவார்கள்.

தமிழக காவல் துறைக்கு தற்போது ஒவ்வோர் ஆண்டும் காவலர்கள், உதவி ஆய்வாளர்கள் தேர்வு செய்யப்பட்டு வருகிறார்கள். அதனால் தற்போது பணியாளர்கள் பற்றாக்குறை என்பது இல்லை என்றார் அவர்.

EVA STALIN